செம்பராயநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின்
செயல்முறைகள் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி. ஜீவிதா ரமேஷ்

ந.க.எண்: 35 நாள்: 03/06/2023

பொருள்: மனைப்பிரிவு –மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – வேலூர் மாவட்டம்- காட்பாடி ஊராட்சி ஒன்றியம்-செம்பராயநல்லூர் ஊராட்சி – செம்பராயநல்லூர் கிராமம் ச.எண்-**241/1, 242, 243/1** மற்றும் **244/1**–ல் **9.76** ஏக்கர் அல்லது **39546.00** சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளித்து வரைபடம் அங்கீகரித்தல்– தொடர்பாக.

பார்வை:

1. MANAGING PARTNER A.SAROJA, SRI VELAAN GRAND PROPERTIES, D.No.95/13, MULLAI NAGAR EXTN., SURAMANGALAM, SALEM-636005.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித **ந.க.எண். 2201/2017**/SPL-CELL நாள்.**28.09.2017.**
3. நகர் ஊரமைப்பு இனை-இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் அவர்களின் **ந.க.எண். VLR/I83WBYXY/035-2023/2022/TCP வேமா**- நாள்.**03.05.2023.**
4. செம்பராயநல்லூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் :**35**, நாள்:**03.06.2023**

உத்தரவு

வேலூர் மண்டலம், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம்/ காட்பாடி ஊராட்சி ஒன்றியம், செம்பராயநல்லூர் ஊராட்சி, செம்பராயநல்லூர் கிராமம் **ச.எண். 241/1, 242, 243/1** மற்றும் **244/1**–ல் **9.76** ஏக்கர் அல்லது **39546.00** சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு அனுமதி கோரிபார்வை 3-ல் காணும் கடிதம் மூலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மனைபிரிவிற்கு தொழில் நுட்ப இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ (வே.மா) எண்.31/2023** என எண்ணிட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் உட்பட்டு இவ்வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துறையின் சுற்றறிக்கையில் ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலமாக பதிவு செய்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது . மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகள் குறித்து உறுதி செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துறையில் மனைபிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

நிபந்தனை

பிற்காலத்தில் மனை தொடர்பாக ஏதேனும் கட்டணங்கள் அரசு கணக்கு தலைப்பு மற்றும் ஊராட்சி கணக்கிற்கு ஊராட்சிக்கு செலுத்த வேண்டி இருப்பின் அதனை செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

03/06/2023
தலைவர்
செம்பராயநல்லூர் ஊராட்சி
காட்பாடி ஒன்றியம்.

இணைப்பு- வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுதல்:

MANAGING PARTNER A.SAROJA, SRI VELAAN GRAND PROPERTIES, D.No.95/13, MULLAI NAGAR EXTN, SURAMANGALAM, SALEM -636005.

நகல் - சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், காட்பாடி.

நகல் – நகர் ஊரமைப்பு இணை இயக்குனர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் வேலூர் அவர்களுக்கு சமர்பிக்கப்படுகிறது.

நகல் – ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்- வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம் காட்பாடி.